கல்வி மறுசீரமைப்பு மற்றும் பயிற்சிக்கான மாநில கவுன்சில், மகாராஷ்டிரா, பூனே

நிபுன்பாரத் கற்றல் பயிற்சி ஆய்வு

பாடம் : தமிழ் வகுப்பு - நான்கு

கற்றல் முடிவு எண் : 1 கதைகள் / கவிதைகள் போன்ற பழக்கமான நூல்கள் பற்றி பேசுதல். கேள்வி, பொருள், படம் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்துதல்.

ஆசிரியர் குறிப்புகள் :

- ஆசிரியர் கவிதையை தாள நயத்துடன் ராகமாக படிக்க வேண்டும்.
- கவிதையை படிக்கும் முன் கவிதையை கவனமாகக் கேட்கவும், அதைப் பற்றி கேள்வி கேட்கப்படும் என்று மாணவர்களிடம் கூறவும்.
- ஒவ்வொரு மாணவருக்கும் கவிதை தனித்தனியாகக் காட்டப்பட்டு கவிதையின் அடிப்படையில் கேள்விகள் கேட்க வேண்டும்.
- ஒரு கேள்விக்கு மாணவர் பதிலளிக்க 10 வினாடிகள் ஒதுக்கவும். 10 வினாடிகளில் பதிலளிக்காவிட்டால் அடுத்த கேள்வியைக் கேட்கவும்.

வாசிக்கவும் :

வானம் கறுத்தால் மழை பெய்யும்
மழை பெய்தால் மண் குளிரும்
மண் குளிர்ந்தால் புல் தழைக்கும்
புல் தழைத்தால் பசு மேயும்
பசு மேய்ந்தால் பால் சுரக்கும்
பால் சுரந்தால் கன்று குடிக்கும்
கன்று குடித்து மிஞ்சியதைக்
கறந்து கொண்டு வந்திடலாம்
காப்பியில் விட்டு குடித்திடலாம்.

- கவிமணி தேசிய விநாயகம்.

| கேள்வி | பதில் |
|---|---|
| 1. இப்பாடலை இயற்றியவர் யார்? | கவிமணி தேசிய விநாயகம் |
| 2. வானம் கறுத்தால் என்ன பெய்யும்? | மழை பெய்யும் |
| 3. தழைக்கும் என்றால் என்ன பொருள்? | வளரும் |
| 4. பாலை எதில் விட்டுக் குடிக்கலாம்? | பாலை காப்பியில் விட்டுக் குடிக்கலாம் |
| 5. பசுவின் குட்டியை எவ்வாறு அழைப்போம்? | கன்று |

மதிப்பீட்டிற்கான வரையறைகள் :

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| கவிதையை கேட்டு 4 முதல் 5 கேள்விகளுக்கு சரியான பதில் கூறல் | 3 |
| கவிதையை கேட்டு 2 முதல் 3 கேள்விகளுக்கு சரியான பதில் கூறல் | 2 |
| கவிதையை கேட்டு ஒரே ஒரு கேள்விக்கு சரியான பதில் கூறல் | 1 |
| கவிதையை கேட்டு கேள்விகளுக்கு பதில் சொல்ல தயங்குதல் அல்லது எந்த கேள்விக்கும் பதில் கூறவில்லை | 0 |

கற்றல் முடிவு எண் : 2 சுற்றுப்புற அனுபவங்கள், கவிதைகள் பற்றி பேசுதல். ஊடகம், உள்ளூர் நிகழ்வுகளைப் பற்றி ஒருவரின் சொந்த மொழியில் பேசுதல்.

ஆசிரியர் குறிப்புகள் :

- ஆசிரியர் பட அட்டைத்தாளை குழந்தைகளிடன் ஒப்படைக்க வேண்டும். அதை கூர்ந்து கவனிக்க சொல்லவும்.
- மாணவர் படத்தைப் பார்த்து வாக்கியத்தை பொருத்துவதற்கு அதிகபட்சம் 1 நிமிடம் அனுமதிக்கவும்.
- கவனித்த பின் நான்கு, ஐந்து வாக்கியங்களை பேசச் சொல்லவும்.



மதிப்பீட்டிற்கான வரையறகள் :

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| படத்தின் உள்ளடக்கத்தை மனதில் வைத்து 4 முதல் 5 வாக்கியங்கள் கூறல் | 3 |
| படத்தின் உள்ளடக்கத்தை மனதில் வைத்து 2 முதல் 3 வாக்கியங்கள் கூறல் | 2 |
| படம் எதைப் பற்றியது என்று கூறுதல் | 1 |
| எதுவும் சொல்லவில்லை | 0 |

கற்றல் முடிவு எண் : 3 நன்கு பழக்கமான பகுதிகளை உரக்க ஏற்ற இறக்கத்துடன் வாசித்தல்

ஆசிரியர் குறிப்புகள் :

- ஆசிரியர் மாணவர்களுக்கு வாசிக்க பத்தியுடன் கூடிய அட்டையை கொடுக்க வேண்டும்.
- பத்தியை கவனமாக வாசிக்க குழந்தைகளிடன் கூற வேண்டும். பின் கேள்விகள் கேட்கப்படும் என்பதையும் கூற வேண்டும்.
- ஒரு மாணவர் ஒரு வார்த்தையை வாசிக்க 5 வினாடிகளுக்கு மேல் தடுமாறினால் அவர் அடுத்த வார்த்தைக்கு செல்ல வேண்டும்.

அடையாளம் :

1. தவறாக வாசித்த அல்லது வாசிக்காத வார்த்தைக்கு குறியீடு ( / ) குறிக்கவும்.
2. சரியாக படித்த சொற்களைக் குறிக்க குறியீடு ( ∅) குறிக்கவும்.

வாசிக்கவும் :

மழைக்காலம் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் காலம். மகாராஷ்ராவில் ஜூன் முதல் செப்டம்பர் வரை மழைக்காலம் ஆகும். இக்காலத்தில் மரம், செடி, கொடிகள் செழித்து வளரும். ஜுலை கனமழை பெய்யும் மாதம் ஆகும். மழை நீரில் குழந்தைகள் காகிதப் படகு விட்டு விளையாடுவர். குடை, நீர்புகா ஆடை போன்றவற்றை மக்கள் பயன்படுத்துவர்.

குளிர்காலம் : இக்காலத்தில் குளிர் அதிகமாக இருக்கும். அக்டோபர் முதல் ஜனவரி வரை குளிர்காலம் ஆகும். குளிர் காலத்தில் கம்பளி ஆடையை மக்கள் அணிவர். சிலர் மரக்குச்சிகளை நெருப்பூட்டி குளிர் காய்வர். இது ஒரு மகிழ்ச்சியான காலம்.

கோடைக்காலம் : இது ஒரு வெப்பமான காலம். பிப்ரவரி முதல் மே மாதம் வரை கோடைக்காலம் ஆகும்.

மாணவர்கள் சரியாக வாசித்த வார்த்தைகளின் எண்ணிக்கை - /70

வாசித்து முடிக்க எடுத்த நேரம் ____________ விநாடிகள்.

மதிப்பீட்டிற்கான வரையறைகள் :

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| 50 முதல் 70 வார்த்தைகளை தெளிவான உச்சரிப்பு, சரியான வேகம் மற்றும் ஏற்ற தாழ்வுகளுடன் குறிப்பிட்ட நேரத்தில் நிறுத்தற் குறியீடுகளுடன் வாசித்தல் | 3 |
| 25 முதல் 49 வார்த்தைகளை சரியான வேகத்தில் தெளிவான உச்சரிப்பு மற்றும் குறிப்பிட்ட வார்த்தைகளை சுயமுன்னேற்றத்துடன் வாசித்தல் | 2 |
| 10 முதல் 24 வார்த்தைகளை பரிந்துரைக்கப்பட்ட நேரத்தை விட அதிக நேரம் எடுத்தல். வார்த்தைகள், எழுத்துகளை பிரித்து வாசித்தல் | 1 |
| எதையும் சரியாக வாசிக்கவில்லை | 0 |

கற்றல் முடிவு எண் : 4 பழக்கமான உரையின் தன்மை மற்றும் சூழலைப் பற்றி தனது கருத்தை வெளிப்படுத்துதல். இதற்காக கற்றல் முடிவு எண் 3இல் கொடுக்கப்பட்ட பத்தியை பயன்படுத்தவும்.

ஆசிரியர் குறிப்புகள் :

- மாணவர்கள் பத்தியை படிப்பதை நிறுத்தும் போது அந்த பத்தியை அவர்களிடமிருந்து எடுத்து விட வேண்டாம்.
- மாணவர் படித்தவுடன் பத்தியின் அடிப்படையில் ஒரு கேள்வி கேட்கவும்.
- மாணவர் 15 வினாடிக்குள் பதிலளிக்காவிட்டால், ‘பதில் இல்லை’ எனக் குறிக்கவும்.
- கேள்விகளை இரண்டு முறைக்கு மேல் கேட்க வேண்டாம். ‘எனக்குத் தெரியாது’ என்று சொன்னால் 0/ எனக் குறிக்கவும்.

| கேள்விகள் | பதில்கள் |
|---|---|
| அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் காலம் எது? | மழைக்காலம் |
| கனமழை பெய்யும் மாதம் எது? | ஜுலை மாதம் |
| குளிர்கால மாதங்கள் எவை? | அக்டோபர் முதல் ஜனவரி வரை |
| மழை நீரில் குழந்தைகள் எவ்வாறு விளையாடுவர்? | காகிதப்படகு விட்டு |
| குளிர்காலத்தில் மக்கள் என்ன ஆடை அணிவர்? | கம்பளி ஆடை |

மதிப்பீட்டிற்கான வரையறைகள் :

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| கதையை படித்தவுடன் 4 முதல் 5 கேள்விகளுக்கு சரியான பதில் கூறுதல் | 3 |
| கதையை படித்தவுடன் 2 முதல் 4 கேள்விகளுக்கு சரியான பதில் கூறுதல் | 2 |
| கதையை படித்தவுடன் 1 முதல் 2 கேள்விகளுக்கு சரியான பதில் கூறுதல் | 1 |
| கேள்விகளுக்கு பதிலளிக்க தயங்குதல் அல்லது சரியாக பதிலளிக்கவில்லை | 0 |

கற்றல் முடிவு எண் : 5 எழுத்து - சொற்கள், பெயர்சொல், வினைச்சொல்

ஆசிரியர் குறிப்புகள் :

- வாக்கியத்திலுள்ள பெயர்சொல் வினைச்சொல் ஆகியவற்றை எழுதக் கூறவும்.
- ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளிக்க 5 வினாடிகள் கொடுக்கவும்.

எ.டு : பறவை வானில் பறந்தது.

பெயர் சொல் : பறவை ; வினைச்சொல் : பறந்தது.

| எண் | சொற்றொடர் | பெயர்ச்சொல் | வினைச்சொல் |
|---|---|---|---|
| 1 | சித்ரா இனிமையாக பாடினாள். | ________ | ________ |
| 2 | கண்ணன் ஊருக்குச் சென்றான். | ________ | ________ |
| 3 | மான் துள்ளி ஓடியது. | ________ | ________ |
| 4 | ஆசிரியர் பாடம் நடத்தினார். | ________ | ________ |

மதிப்பீட்டிற்கான வரையறைகள் :

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| 8 முதல் 6 பெயர்ச்சொல், வினைச்சொற்களை சரியாக எழுதுதல். | 3 |
| 5 முதல் 3 பெயர்ச்சொல், வினைச்சொற்களை சரியாக எழுதுதல். | 2 |
| 2 முதல் 1 பெயர்ச்சொல், வினைச்சொற்களை சரியாக எழுதுதல். | 1 |
| எந்த பதிலையும் எழுதவில்லை. | 0 |

❑❑❑